ஜுஷ்டம் - யாவராலும் போற்றிப் புகழ்ந்து கொண்டாடப் படுகின்றவனும்
ஸர்வ ஶாஸ்த்ர விஶாரதம் - எல்லா சாஸ்திரங்களிலும் நிபுணனுமாகிய
புத்ரம் ஹி - அந்த ஒரு திருக்குமாரனையும்
விநா - விட்டுப் பிரிந்தவளாகி
ஜீவிதும் - உயிருடனிருக்க
உத்ஸஹே ந - பொறேன்.

नहि मे जीविते किञ्चित् सामर्थ्यमिह कल्प्यते ।
अपश्यन्त्याः प्रियं पुत्रं महाबाहुं महाबलम् ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ந ஹி மே ஜீவிதே கிஞ்சித் ஸாமர்த்யமிஹ கல்ப்யதே ।
அபஶ்யந்த்யா: ப்ரியம் புத்ரம் மஹாபாஹும் மஹாபலம் ॥ 20

மஹாபாஹும் - 'ஆஜானுபாஹுவும்
மஹாபலம் - மகாசக்திமானும்
ப்ரியம் - மிக அருமையுமான
புத்ரம் - திருக்குமாரனை
இஹ - இவ்வுலகில்
அபஶ்யந்த்யா: - கண்முன் பார்க்க முடியாதாகிவிட்ட
மே - எனக்கு
ஜீவிதே - உயிரை வைத்துக்கொண்டிருக்கும் விஷயத்தில்
கிஞ்சித் ஹி - வேறு எதுவும்
ஸாமர்த்யம் - பிரயோஜனமாக
கல்ப்யதே ந - கற்பிக்கப்படவில்லை.

अयं हि मां दीपयते समुत्थितस्तनूजशोकप्रभवो हुताशनः ।
महीमिमां रश्मिभिरुद्धतप्रभो यथा निदाघे भगवान् दिवाकरः ॥

அயம் ஹி மாம் தீபயதே ஸமுத்தித
ஸ்தநூஜ ஶோக ப்ரபவோ ஹுதா ஶன: ।
மஹீமிமாம் ரஶ்மிபி ருத்தத ப்ரபோ
யதா நிதாகே பகவான் திவாகர: ॥ 21

அயம் - 'இப்போதிய
தநூஜஶோக ப்ரபவ: - புத்திரசோகத்தாலுண்டாயிருக்கும்
ஹுதாஶன: - தீயானது
மாம் - என்னை
திவாகர: - சூரிய
பகவான் - ப்கவான்
இமாம் மஹீம் ஹி - இந்த உலகையே
ஸமுத்தித: - குதபகாலத்தில் பிரகாசிக்கின்றவனாய்
உத்தித ப்ரபவ: - பரிபூர்ண தேஜோமயனாய்
ரஶ்மிபி: - கிரணங்களால்
நிதாகே - க்ரீஷ்மருதுவில்
யதா - எவ்வண்ணமோ அவ்வண்ணமே
தீபயதே - எரித்துக் கொண்டிருக்கிறது.

*இத்யார்ஷே ஸ்ரீமத் ராமாயணே வால்மீகீயே ஆதிகாவ்யே
சதுர்விம்ஶதி ஸஹஸ்ரிகாயாம் ஸம்ஹிதாயாம் அயோத்யா காண்டே
கௌஸல்யா பரிதேவிதம் நாம த்ரிசத்வாரிம்ஶ: ஸர்க: ॥*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சதுஸ்சத்வாரிம்ஶ: ஸர்க: - 44

विलपन्तीं तथा तां तु कौसल्यां प्रमदोत्तमाम् ।
इदं धर्मे स्थिता धर्म्यं सुमित्रा वाक्यमब्रवीत् ॥

விலபந்தீம் ததா தாம் து கௌஸல்யாம் ப்ரமதோத்தமாம் ।
இதம் தர்மே ஸ்திதா தர்ம்யம் ஸுமித்ரா வாக்யமப்ரவீத் ॥ 1

ததா - மேற்கண்டவண்ணமாய்
விலபந்தீம் - வாய்விட்டுப் புலம்பி அழுதுகொண்டிருந்த
ப்ரமதோத்தமாம் - மாதுசிரோமணியாகும்
தாம் - அந்த
கௌஸல்யாம் - கௌஸல்யாதேவியாரைப் பார்த்து,
தர்ம்யே - ஞானக்கண்ணில்
ஸ்திதா - உபதேசம் பெற்றவளாகிய
ஸுமித்ரா - ஸுமித்ராதேவியார்
து - இச்சமயத்தில்
இதம் - பின்வரும்
தர்ம்யம் - கட்பார்வையாலன்றி ஞானத்தால் உணருகையாகிய ஞானதிருஷ்டியை நன்கு விளங்கக் காட்டுகிறதாகிய
வாக்யம் - ஹிதோபதேசத்தை
அப்ரவீத் - அருளிச் செய்தனள்.

तवार्ये सद्गुणैर्युक्तः पुत्रः स पुरुषोत्तमः ।
किं ते विलपितेनैवं कृपणं रुदितेन वा ॥

தவார்யே ஸத்குணைர்யுக்த: புத்ர: ஸ புருஷோத்தம: ।
கிம் தே விலபிதேநைவம் க்ருபணம் ருதிதேந வா ॥ 2

ஆர்யே - 'ஆர்யே!
தவ - தேவரீரது
ஸத்குணை: - யாவராலுங்கொண்டாடப்பட்டதாகிய திருக்கல்யாண குணங்களோடு
யுக்த: - திருவிளையாடிக்கொண்டிருக்கும்
புத்ர: - திருக்குமாரன்
புருஷோத்தம: - புருஷோத்தமனெனப்படும்
ஸ: - ஸாக்ஷாத் மஹாவிஷ்ணு
க்ருபணம் - உள்ளத்தைக்கண்டு கொள்ளாமல்
ஏவம் - மேற்கண்டவண்ணமாய்
தே - தேவரீருக்கு
விலபிதேந - வாய்விட்டுப் புலம்புவதற்காகவாவது
ருதிதேந வா - கண்ணீர் பெருக அழுவதற்காவது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கிம் - என்ன காரணமிருக்கிறது? அதை அடியாளுக்குச் சொல்லியருளலாமே.

यस्तवार्ये गतः पुत्रस्त्यक्त्वा राज्यं महाबलः ।
साधु कुर्वन् महात्मानं पितरं सत्यवादिनम् ॥

யஸ்தவார்யே கத: புத்ரஸ்த்யக்த்வா ராஜ்யம் மஹாபல: ।
ஸாது குர்வந் மஹாத்மானம் பிதரம் ஸத்யவாதினம் ॥ 3

ஆர்யே - 'ஆர்யே!
தவ - தேவரீரது
மஹாபல: - அறியவொண்ணாத சக்தி படைத்தவனாகிய
புத்ர: - திருக்குமாரனாகின்றவன்
ய: - எவனோ, அவன்
மஹாத்மானம் - மகாத்மாவான
பிதரம் - திருத்தந்தையாரை
ஸாது - குறையின்றி
ஸத்யவாதினம் - சொன்ன சொல் தவறாதிருக்கின்றவராக
குர்வந் - செய்கின்றவனாய்,
ராஜ்யம் - ராஜ்யத்தை
த்யக்த்வா - பற்றற்றுத் துறந்து,
கத: - வனமேகியிருக்கின்றனன்.

शिष्टैराचरिते सम्यक् शश्वत् प्रेत्यफलोदये ।
रामो धर्मे स्थितः श्रेष्ठो न स शोच्यः कदाचन ॥

ஶிஷ்டைராசரிதே ஸம்யக் ஶஶ்வத் ப்ரேத்ய பலோதயே ।
ராமோ தர்மே ஸ்தித: ஶ்ரேஷ்டோ ந ஸ ஶோச்ய: கதாசந ॥ 4

ஶிஷ்டை: - ஞானவான்களால்
ஆசரிதே - தர்மவிதியாயனுஷ்டிக்கப்பட்டு வந்ததும்,
ப்ரேத்ய பலோதயே - பரமசித்தி சித்தமாய் கிடைக்கிறதுமாகிய
தர்மே - பித்ருவாக்கிய பரிபாலனமெனும் தர்மத்தில்
ஸம்யக் - நிஸ்ஸந்தேகமாய்
ஶஶ்வத் - எக்காலத்திலும் எல்லா தசையிலும்,
ஸ்தித: - அசஞ்சல பக்தியுடையவனாகிய
ராம: - ஸ்ரீராமன்,
ஶ்ரேஷ்ட: - மஹாவிஷ்ணு.
ஸ: - அவன்
கதாசன - ஒருக்காலும்
ஶோச்ய: ந - கஷ்டப்படுகிறானென நினைத்து பிறரால் வருத்தப்படுவதற்கு பாத்திரனாகான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

वर्तते चोत्तमां वृत्तिं लक्ष्मणोऽस्मिन् सदानघः ।
दयावान् सर्वभूतेषु लाभस्तस्य महात्मनः ॥

வர்த்தே சோத்தமாம் வ்ருத்திம் லக்ஷ்மணோऽஸ்மின் ஸதாநக: ।
தயாவான் ஸர்வ பூதேஷு லாபஸ்தஸ்ய மஹாத்மன: ॥ 5

ஸர்வ பூதேஷு - இதுவரையில் நடைபெற்ற ஒவ்வொரு கார்யங்களிலும்
அஸ்மின் - இவனிடத்தில்
தயாவான் - திருப்பணிசெய்து வந்தவனாகிய
லக்ஷ்மண: - லக்ஷ்மணன்
உத்தமாம் - பரமபதசித்தியை சித்தமாயளிக்கவல்லதாகிய
வ்ருத்திம் ச - கைங்கர்யத்தையும்
ஸதா - ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும்
அநக: - பக்திமை தலைக்கொண்டு எப்படிப்பட்ட குறைக்குமிடங்கெடாதவனாய்
வர்த்தே - கூடயிருந்து செய்து வருகிறான்.
மஹாத்மன: - புத்திநுட்பம் படைக்கப்பெற்ற
தஸ்ய - அவனுக்கு
லாப: - இவ்வுலகிலெதொன்றைப் பெறவேண்டுமோ அதைப்பெற்றதாகிறது.

अरण्यवासे यद्दुःखं जानती वै सुखोचिता ।
अनुगच्छति वैदेही धर्मात्मानं तवात्मजम् ॥

அரண்யவாஸே யத் துக்கம் ஜாநதீ வை ஸுகோசிதா ।
அநுகச்சதி வைதேஹீ தர்மாத்மானம் தவாத்மஜம் ॥ 6

ஸுகோசிதா - பதிவ்ரதாதர்மத்தை உள்ளபடியறிந்தவளாகிய
வைதேஹீ வை - ஸீதையும்,
அரண்யவாஸே - அரண்யவாஸத்தில்
யத் துக்கம் - உண்டாகும் கஷ்டமெதுவோ அதை
ஜாநதீ - கூடயிருந்து அனுபவிக்கின்றவளாய்
தவ - தேவரீரது
தர்மாத்மானம் - தர்மாத்மாவாகிய
ஆத்மஜம் - திருக்குமாரனிடம்
அநுகச்சதி - மனங்கோணாது நடந்து வருகின்றாள்.

कीर्तिभूतां पताकां यो लोके भ्रमयति प्रभुः ।
दमसत्यव्रतपरः किं न प्राप्तस्तवात्मजः ॥

கீர்தி பூதாம் பதாகாம் யோ லோகே ப்ரமயதி ப்ரபு: । 7
தம ஸத்ய வ்ரதபர: கிம் ந ப்ராப்தஸ்தவாத்மஜ: ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

லோகே - 'உலகில்
ய: - எவனொருவன்,
ப்ரபு: - எதையும் செய்யவல்லவனாய்
தம ஸத்ய வ்ரத பர: - தர்மமில்லாததில் மனதை செலுத்தாதிருத்தல், சொன்ன சொல் தவறாமை, தர்மானுஷ்டானம் இவைகளில் பற்றுடையவனாய்
கீர்தி பூதாம் - யாவராலும் போற்றிப் புகழப்படும் பெருமையால் விளையும்,
பதாகாம் - திருக்கல்யாண குணத்தை
ப்ரமயதி - எங்கும் பரவவிட்டுக் கொண்டிருக்கிறானோ, அந்த
தவ - தேவரீரது
ஆத்மஜ: - திருக்குமாரன்,
ப்ராப்த: ந - 'இருக்கவேண்டிய இடத்தில் இல்லை' என்பது
கிம் - எங்ஙனம்?

व्यक्तं रामस्य विज्ञाय शौचं माहात्म्यमुत्तमम् ।
न गात्रमंशुभिः सूर्यः संतापयितुमर्हति ॥

வ்யக்தம் ராமஸ்ய விஞாய ஶௌசம் மாஹாத்ம்ய முத்தமம் ।
ந காத்ரமம்ஶுபி: ஸூர்ய: ஸந்தாபயிதுமர்ஹதி ॥ 8

ஸூர்ய: - 'ஸூர்யபகவான்,
ராமஸ்ய - ஸ்ரீராமனுடைய
ஶௌசம் - த்ரிகரணசுத்தியையும்
உத்தமம் - ஸமானமாகிறதும், மேம்பட்டதுமில்லாததாகிய
மாஹாத்ம்யம் - மாஹாத்மியத்தையும்
வ்யக்தம் - திருவவதாரப் பிறப்பையும்,
விஞாய - சிந்தையில்கொண்டு,
அம்ஶுபி: - கிரணங்களால்
காத்ரம் - திருமேனியை
ஸந்தாபயிதும் - தாபமடையச் செய்ய
அர்ஹதி ந - மாட்டான்.

शिवः सर्वेषु कालेषु काननेभ्यो विनिःसृतः ।
राघवं युक्तशीतोष्णः सेविष्यति सुखोऽनिलः ॥

ஶிவ: ஸர்வேஷு காலேஷு கானனேப்யோ விநி:ஸ்ருத: ।
ராகவம் யுக்த ஶீதோஷ்ண: ஸேவிஷ்யதி ஸுகோऽநில: ॥ 9

அநில: - 'வாயுபகவான்
கானனேப்ய: - மரங்களடர்ந்த காடுகளிலிருந்து
விநிஃஸ்ருத: - வெளியில் வந்து ஸஞ்சரிக்கின்றவராய்
ஸர்வேஷு - எல்லா

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காலேஷு - காலங்களிலும்
யுக்த ஶீதோஷ்ண: - வேண்டிய அளவுமட்டும் குளிர்மையும் வெப்பமுமுடையவராய்,
ஶிவ: - தேகத்திற்காரோக்யத்தை விளைவிக்கின்றவராய்,
ஸுக: - மனதிற்கு இன்பத்தைத் தருகின்றவராய்,
ராகவம் - ஶ்ரீராமனுக்கு
ஸேவிஷ்யதி - திருவுளப்படியே நடந்துவருவார்.

शयानमनघं रात्रौ पितेवाभिपरिष्वजन् ।
रश्मिभिः संस्पृशञ्शीतैश्चन्द्रमा ह्लादयिष्यति ॥

ஶயானமநகம் ராத்ரௌ பிதேவாபி பரிஷ்வஜன் ।
ரஶ்மிபி: ஸம்ஸ்ப்ருஶஞ் ஶீதைஶ் சந்த்ரமா ஹ்லாதயிஷ்யதி ॥ 10

சந்த்ரமா: - 'தண்ணவன்
ராத்ரௌ - இரவில்
ஶயானம் - பள்ளிகொண்டிருக்கும்
அநகம் - தோஷரஹிதனாகுமவனை
ஶீதை: - நித்திரையை நன்கு விளைவிக்க வல்லதாகிய
ரஶ்மிபி: - கிரணங்களால்
பிதா - திருத்தந்தை
இவ - போலவே
அபிபரிஷ்வஜன் - அணைத்துக்கொண்டு
ஸம்ஸ்ப்ருஶன் - ஸுகமாய்த் தழுவுகின்றவனாய்,
ஹ்லாதயிஷ்யதி - திருவுளமுவக்கச் செய்வான்.

ददौ चास्त्राणि दिव्यानि यस्मै ब्रह्मा महौजसे ।
दानवेन्द्रं हतं दृष्ट्वा तिमिध्वजसुतं रणे ॥

ததௌ சாஸ்த்ராணி திவ்யானி யஸ்மை ப்ரஹ்மா மஹௌஜஸே ।
தானவேந்த்ரம் ஹதம் த்ருஷ்ட்வா திமித்வஜஸுதம் ரணே ॥ 11

स शूरः पुरुषव्याघ्रः स्वबाहुबलमाश्रितः ।
असंत्रस्तोऽप्यरण्यस्थो वेश्मनीव निवत्स्यति ॥

ஸ ஶூர: புருஷவ்யாக்ர: ஸ்வ பாஹுபலமாஶ்ரித: ।
அஸந்த்ரஸ்தோ அப்யரண்யஸ்தோ வேஶ்மநீவ நிவத்ஸ்யதி ॥ 12

திமித்வஜஸுதம் - 'திமித்வஜனுடைய★ மகனும் ஸுபாஹு' எனும் பெயர் பூண்டவனுமான
தானவேந்த்ரம் - ராக்ஷஸோத்தமனை
ரணே - போரில்
ஹதம் - மாய்க்கப்பட்டவனாய்
த்ருஷ்ட்வா - கண்டருளிய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ப்ரஹ்மா - அந்தணனது பெயரையும், பெருமையையும், தேஜஸ்ஸையும் தவமஹிமையால் பெற்றவராகிய விச்வாமித்திரர்,
மஹௌஜஸே - திவ்ய சக்தியையுடைய
யஸ்மை - எந்த ஒருவனுக்கு
திவ்யானி அஸ்த்ராணி- திவ்ய அஸ்திரங்களை
ததௌ ச - தந்தருளினாரோ அந்த
ஶூர: - தோளாத தனி வீரனும்,
புருஷ வ்யாக்ர: - புருஷோத்தமனுமாகிய
ஸ: - அவன்,
ஸ்வ பாஹு பலம் - பிறவிக்குணமாய் வந்த போர்வீரத் தன்மையை
ஆஶ்ரித: - ஸ்வபாவசித்தமாயிருக்கப் பெற்றவனாய்
வேஶ்மநி - திருமாளிகையில்
இவ - போலவே
அரண்யஸ்த: - வனவாஸியாய்
அபி - இருக்கையிலும்
அஸந்த்ரஸ்த: - சலியா மனத்தனாய்
நிவத்ஸ்யதி - வாஸம் செய்வான்.

★இந்திரனால் தசரத சக்கிரவர்த்தியாரின் உதவியைக் கொண்டு கொல்லப்பட்ட அரக்கனாகிய சம்பாஸுரன்

यस्येषुपथमासाद्य विनाशं यान्ति शत्रवः ।
कथं न पृथिवी तस्य शासने स्थातुमर्हति ॥

யஸ்யேஷு பத மாஸாத்ய விநாஶம். யாந்தி ஶத்ரவ: ।
கதம் ந ப்ருதிவீ தஸ்ய ஶாஸனே ஸ்தாதுமர்ஹதி ॥ 13

யஸ்ய - எந்த ஒருவனுடைய
இஷுபதம் - பாணங்களினிலக்குக்கு
ஆஸாத்ய - பாத்திரப்பட்டு,
ஶத்ரவ: - சத்ருக்கள்
விநாஶம் - நாசத்தை
யாந்தி - அடைகிறார்களோ;
தஸ்ய - அவனுடைய
ஶாஸனே - அதிகாரத்தில்
ஸ்தாதும் - வயப்பட்டிருக்க
ப்ருதிவீ - பிரபஞ்சம்
கதம் - என்ன காரணத்தைக்கொண்டு
அர்ஹதி ந - பிரியமில்லாமலிருக்கும்.

या श्रीः शौर्यं च रामस्य या च कल्याणसत्त्वता ।
निवृत्तारण्यवासः स क्षिप्रं राज्यमवाप्स्यति ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

யா ஸ்ரீ: ஶௌர்யம் ச ராமஸ்ய யா ச கல்யாண ஸத்த்வதா ।
நிவ்ருத்தாரண்ய வாஸ: ஸ க்ஷிப்ரம் ராஜ்யமவாப்ஸ்யதி ॥ 14

ராமஸ்ய - 'ஸ்ரீராமனுக்கு
ஸ்ரீ: - மானிடர்களுக்கு மேம்பட்டதாயமானுஷ்டய அல்லது தெய்வங்களுக்கே உரிய சக்தி
யா - எதுவோ அதுவும்,
ஶௌர்யம் ச - தோளாத தனி வீரத் தன்மையும்,
கல்யாண ஸத்த்வதா - (ஸாத்விக, ராசத, தாமதமாகிய மூன்று குணங்களில் முதல் குணமாகிய) ஸாத்விகமென்பது
யா ச - எதுவோ அதுவுமுண்டு.
ஸ: - அவன்
க்ஷிப்ரம் - காலம்போன வழி தெரியாமலே
நிவ்ருத்தாரண்ய வாஸ: - அரண்யவாஸத்தை குறையா முடித்தவனாய்
ராஜ்யம் - ராஜ்யத்தை
அவாப்ஸ்யதி - ஸ்வாதீனப்படுத்திக் கொள்வான்.

सूर्यस्यापि भवेत् सूर्यो ह्यग्नेरग्निः प्रभोः प्रभुः ।
श्रियः श्रीश्च भवेदग्र्या कीर्त्याः कीर्तिः क्षमाक्षमा ॥

ஸூர்யஸ்யாபி பவேத்ஸூர்யோ ஹ்யக்னே ரக்னி: ப்ரபோ: ப்ரபு: ।
ஶ்ரிய: ஸ்ரீஶ்ச பவேதக்ரயா கீர்த்யா: கீர்தி: க்ஷமாக்ஷமா ॥ 15

दैवतं दैवतानां च भूतानां भूतसत्तमः ।
तस्य के ह्यगुणा देवि वने वाप्यथ वा परे ॥

தைவதம் தைவதாநாம் ச பூதாநாம் பூதஸத்தம: ।
தஸ்ய கே ஹ்யகுணா தேவி வனே வாஅப்யத வா புரே ॥ 16

தேவி - 'அம்மா!
தைவதாநாம் - தெய்வங்களுக்கு
தைவதம் - தெய்வம்.
பூதாநாம் - அடியார்களுக்கு
பூதஸத்தம: - திருலோகத்திலும் சிரேஷ்டமாய் விளங்குகின்றவன்.
ஸூர்யஸ்ய அபி - ஸூர்யபகவானுக்கும்
ஸூர்ய: - ப்ரகாசத்தையளித்தருளியவனாக
பவேத் - உரிமைபெற்று விளங்குகின்றான்.
அக்னே: - அக்னிபகவானுக்கும்
அக்னி: ச - கொளுத்துந்தன்மையைத்தந்தருளியவனாகவும்,
ப்ரபோ: - நேதாக்களுக்கு
ப்ரபு: - அதிஷ்டாதாவாகவும்,
ஶ்ரிய: - தெய்வசக்திக்கு
ஸ்ரீ: - தெய்வசக்தியைத் தந்தருளியவனாகவும்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கீர்த்யா:	-	தெய்வ தேஜஸிற்கு
அக்ரயா	-	முதலில்
கீர்தி: ச	-	தெய்வ தேஜஸ்ஸை அளித்தவனாகவும்
க்ஷமாக்ஷமா	-	அபராதம் செய்தவர்களை மன்னிப்பதையே விரதமாய் கொண்டவனாகவும்
பவேத்	-	உரிமைபெற்று விளங்குகிறான்.
ஹி	-	ஆனபடியால்
தஸ்ய	-	அவனுக்கு
புரே	-	திருமாளிகையில் தானாகட்டும்
அதவா	-	அல்லது
வனே அபி வா	-	வனத்தில் தானாகட்டும்
அகுணா:	-	நன்மை தராதவர்களாய்
கே ஹி	-	எவர்களாகுவார்கள்?

पृथिव्या सह वैदेह्या श्रिया च पुरुषर्षभः ।
क्षिप्रं तिसृभिरेताभिः सह रामोऽभिषेक्ष्यते ॥

ப்ருதிவ்யா ஸஹ வைதேஹ்யா ஶ்ரியா ச புருஷர்ஷப: ।
க்ஷிப்ரம் திஸ்ருபிரேதாபி: ஸஹ ராமோஅபிஷேக்ஷ்யதே ॥ 17

ஸ:	-	'அப்படிப்பட்ட
புருஷர்ஷப:	-	புருஷோத்தமனாகும்
ராம:	-	ஸ்ரீராமன்
ஏதாபி:	-	இந்த்
திஸ்ருபி:	-	மூவர்களாகிய
ப்ருதிவ்யா	-	பார்மடந்தையோடும்,
வைதேஹ்யா	-	ஸீதாதேவியுடனும்,
ஶ்ரியா ச	-	ராஜ்யலக்ஷ்மியுடனும்
ஸஹ ஹ	-	கூடவே
க்ஷிப்ரம்	-	விரைவில்
அபிஷேக்ஷ்யதே	-	திருவபிஷேகம் செய்யப்படுவான்.

दुःखजं विसृजन्त्यस्त्रं निष्क्रामन्तमुदीक्ष्य यम् ।
अयोध्यायां जनाः सर्वे शोकवेगसमाहताः ॥

துக்கஜம் விஸ்ருஜன்த்யஸ்ரம் நிஷ்க்ராமந்தமுதீக்ஷ்ய யம் ।
அயோத்யாயாம் ஜனா: ஸர்வே: ஶோகவேகஸமாஹதா: ॥ 18

कुशचीरधरं वीरं गच्छन्तमपराजितम् ।
सीतेवानुगता लक्ष्मीस्तस्य किं नाम दुर्लभम् ॥

குஶ சீரதரம் வீரம் கச்சந்தமபராஜிதம் ।
ஸீதேவாநுகதா லக்ஷ்மீஸ் தஸ்ய கிம் நாம துர்லபம் ॥ 19

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அயோத்யாயாம் - 'அயோத்திமாநகரில்
ஸர்வ: - எல்லா
ஜனா: - ஜனங்களும்
அபராஜிதம் - எக்காலத்திலும் எவராலும் ஜயிக்க முடியாத தன்மையைப் படைக்கப்பெற்ற
வீரம் - தோளாத தனிவீரனாகும்
யம் - எந்த ஒருவனை
குஶ சீரதரம் - மரஉரி உடுத்தவனாய்
நிஷ்க்ராமந்தம் - வெளிக்கிளம்பியவனாய்
கச்சந்தம் - வனமேகிவிட்டவனாய்
உதீக்ஷ்ய - நினைத்து,
ஶோக வேக ஸமாஹதா: - சோகத்தின்கடுமையால் மிகப்பீடிக்கப்பட்டவர்களாய்
துக்கஜம் - மனவேதனையால் வெளிவரும்
அஸ்ரம் - கண்ணீரை
விஸ்ருஜந்தி - சொரிகின்றார்களோ,
இவ - ஸாக்ஷாத்
லக்ஷ்மீ: - லக்ஷ்மியாகும்
ஸீதா - ஸீதை
அநுகதா - பின்தொடர்ந்து சென்றிருக்கிறாளோ
தஸ்ய - அவனுக்கு
துர்லபம் நாம - பெறுதற்கரியதாகிறது என்பது
கிம் - ஏதேனுமுண்டோ?'

धनुर्ग्रहवरो यस्य बाणखड्गास्त्रभृत् स्वयम् ।
लक्ष्मणो व्रजति ह्यग्रे तस्य किं नाम दुर्लभम् ॥

தநுர் க்ரஹவரோ யஸ்ய பாணகட்காஸ்த்ர ப்ருத் ஸ்வயம் ।
லக்ஷ்மணோ வ்ரஜதி ஹ்யக்ரே தஸ்ய கிம்நாம துர்லபம் ॥ 20

யஸ்ய - 'எவனொருவனுக்கு
அக்ரே - முன்னிலையில்
தநுர்க்ரஹவர: - வில்லாளிகளில் ச்ரேஷ்டனாகிய
லக்ஷ்மண: - லக்ஷ்மணன்,
பாணகட்காஸ்த்ர ப்ருத் - பாணம், கத்தி, அஸ்திரம் இவைகளை கையில் பிடித்துக் கொண்டவனாய்
ஸ்வயம் - ஸர்வாபீஷ்டத்துடன்
வ்ரஜதி - சென்றுகொண்டிருக்கிறானோ
தஸ்ய ஹி - அவனுக்கும்
துர்லபம் நாம - பெறலரியதாகிறது என்பது
கிம் - ஏதேனுமுண்டோ?

निवृत्तवनवासं तं द्रष्टासि पुनरागतम् ।
जहि शोकं च मोहं च देवि सत्यं ब्रवीमि ते ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நிவ்ருத்த வனவாஸம் தம் த்ரஷ்டாஸி புனராகதம் ।
ஜஹி ஶோகம் ச மோஹம் ச தேவி ஸத்யம் ப்ரவீமி தே ॥ 21

தே - 'தேவரீருக்கு
ஸத்யம் - பிரமாணமாகிய கோட்பாடை
ப்ரவீமி - அடியேன் விக்ஞாபனம் செய்கின்றேன்.
ஶோகம் ச - சோகத்தையும்
மோஹம் ச - உண்மையைக் கண்டுகொள்ளாத வண்ணம் ஒருவரிடத்திலுள்ள வாத்ஸல்யத்தால் ஏற்படும் அக்ஞானத்தையும்
ஜஹி - தேவரீர் விட்டு ஒழிப்பீராக.
தேவி - தாயே!
தம் - அவனை
நிவ்ருத்த வனவாஸம் - வனவாஸத்தை குறையின்றி முடித்துவிட்டவனாய்
புன: - மீளவும்
ஆகதம் - திரும்பிவந்து சேர்ந்தவனாய்
த்ரஷ்டாஸி - தேவரீர் கண்குளிரக் கண்டு மகிழ்வீர்.

शिरसा चरणावेतौ वन्दमानमनिन्दिते ।
पुनर्द्रक्ष्यसि कल्याणि पुत्रं चन्द्रमिवोदितम् ॥

ஶிரஸா சரணாவேதௌ வந்தமான மநிந்திதே ।
புனர் த்ரக்ஷ்யஸி கல்யாணி புத்ரம் சந்த்ரமிவோதிதம் ॥ 22

அநிந்திதே - 'தோஷரஹிதையென
கல்யாணி - திருலோகப் பிரசித்தி பெற்றவளே!
ஏதௌ - இவ்விரண்டு
சரணௌ - திருவடித் தாமரைகளில்
ஶிரஸா - முடிதாழ்த்தி,
வந்தமானம் - சேவிக்கும்
புத்ரம் - திருக்குமாரனை
உதிதம் சந்த்ரம் - பூர்ணச்சந்திரனை
இவ - எவ்வண்ணமோ அவ்வண்ணமே
புன: - முன்னிலுமதிகமாய்
த்ரக்ஷ்யஸி - கண்குளிரக் காணப்போகின்றீர்.

पुन: प्रविष्टं दृष्ट्वा तमभिषिक्तं महाश्रियम् ।
समुत्स्रक्ष्यसि नेत्राभ्यां क्षिप्रमानन्दजं पय: ॥

புன: ப்ரவிஷ்டம் த்ருஷ்ட்வா தமபிஷிக்தம் மஹாஶ்ரியம் ।
ஸமுத்ஸ்ரக்ஷ்யஸி நேத்ராப்யாம் க்ஷிப்ரமானந்தஜம் பய: ॥ 23

தம் - 'அவனை
க்ஷிப்ரம் - விரைவில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அபிஷிக்தம் - திருவபிஷேகம் கொண்டவனாய்
மஹாஸ்ரியம் - மஹத்தாகிய செங்கோலை
ப்ரவிஷ்டம் - செலுத்திக் கொண்டிருக்கின்றவனாய்
த்ருஷ்ட்வா - கண்குளிரப் பார்த்து,
நேத்ராப்யாம் - இரு திருக்கண்களிலிருந்து
ஆனந்தஜம் - ஆனந்தத்தால் வெளிவரும்
பய: - கண்ணீரை
புன: - இதற்கு பதிலாய்
ஸமுத்ஸ்ரக்ஷ்யஸி - தேவரீர் சொரியப் போகின்றீர்.

मा शोको देवि दुःखं वा न रामे दृश्यतेऽशिवम् ।
क्षिप्रं द्रक्ष्यसि पुत्रं तं ससीतं सहलक्ष्मणम् ॥

மா ஶோகோ தேவி துக்கம் வா ந ராமே த்ருச்யதே(அ)ஶிவம்।
க்ஷிப்ரம் த்ரக்ஷ்யஸி புத்ரம் தம் ஸஸீதம் ஸஹ லக்ஷ்மணம்॥ 24

தேவி - 'தாயே!
ராமே - ஸ்ரீராமரிடத்தில்
அஶிவம் - கஷ்டமாகிறது எதொன்றும்
த்ருச்யதே ந - அணுகமாட்டாது.
ஶோக: - மனவேதனை தானாகட்டும்,
துக்கம் வா - மனச்சஞ்சலப்படுதல் தானாகட்டும்
மா - இனி தேவரீருக்கு வேண்டாம்.
க்ஷிப்ரம் - விரைவில்
தம் - அந்த
புத்ரம் - புதல்வனை
ஸஸீதம் - ஸீதாஸமேதனாயும்,
ஸஹ லக்ஷ்மணம் - லக்ஷ்மணஸமேதனாயும்
த்ரக்ஷ்யஸி - தேவரீர் காணப்பெறுவீர்.

त्वयाशेषो जनश्चायं समाश्वास्यो सदानघे ।
किमिदानीमिदं देवि करोषि हृदि विक्लबम् ॥

த்வயா(அ)ஶேஷோ ஜனஸ்சாயம் ஸமாஸ்வாஸ்யோ யதாஅநகே।
கிமிதானீமிதம் தேவி கரோஷி ஹ்ருதி விக்லபம்॥ 25

அநகே - 'துக்கம் கஷ்டம் இவைகளை இதுவரையில் அனுபவியாத
தேவி - மாதே!
யதா - இப்படியிருக்கையில்
இதானீம் - இப்பொழுது
ஹ்ருதி - உள்ளத்தில்
விக்லபம் - தடுமாற்றத்திற்கு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கரோஷி - இடம்கொடுத்துவிட்டீர்.
இதம் கிம் - இது என்ன?
த்வயா - தேவரீரால்
அயம் - இங்கிருக்கும்
அஶேஷ: - எல்லா
ஜன: ச - ஜனங்களும்
ஸமாஶ்வாஸ்ய: - தேற்றப்படவேண்டியவர்கள்.

नार्हा त्वं शोचितुं देवि यस्यास्ते राघवः सुतः ।
न हि रामात् परो लोके विद्यते सत्पथे स्थितः ॥

நார்ஹா த்வம் ஶோசிதும் தேவி யஸ்யாஸ்தே ராகவ: ஸுத: ।
ந ஹி ராமாத்பரோ லோகே வித்யதே ஸத்பதே ஸ்தித: ॥ 26

தேவி - 'மாதே!
யஸ்யா: - எந்த அந்த
தே - தேவரீருக்கு
ராகவ: - ஶ்ரீராமன்
ஸுத: - திருமகன்.
லோகே - இவ்வுலகில்
ராமாத் - ஶ்ரீராமனைக் காட்டிலும்
பர: - வேறொருவன்
ஸத்பதே - உத்தம குண விஷயத்தில்
ஸ்தித: - ஈடுபட்டுக் கொண்டாடப்படுகின்றவன்
வித்யதே ந - கிடையாது.
ஹி - ஆனபடியால்
த்வம் - தேவரீர்
ஶோசிதும் - துயரப்படுவதற்கு
அர்ஹா ந - பாத்திரமாக மாட்டீர்.

अभिवादयमानं तं दृष्ट्वा ससुहृदं सुतम् ।
मुदाश्रु मोक्ष्यसे क्षिप्रं मेघलेखेव वार्षिकी ॥

அபிவாதயமானம் தம் த்ருஷ்ட்வா ஸஸுஹ்ருதம் ஸுதம் ।
முதாஶ்ரு மோக்ஷ்யஸே க்ஷிப்ரம் மேகலேகேவ வார்ஷிகீ ॥ 27

தம் - 'அந்த
ஸுதம் - திருக்குமாரனை
க்ஷிப்ரம் - சீக்கிரத்தில்
ஸஸுஹ்ருதம் - கூடயிருந்து கைங்கர்யம் செய்துவந்த இருவர்கள் சமேதனாய்
அபிவாதயமானம் - திருவடிகளில் விழுந்து தண்டம் சமர்ப்பிக்கின்றவனாய்,
த்ருஷ்ட்வா - பார்த்து,
முதா - சந்தோஷத்தினால்
வார்ஷிகீ - கார்காலத்திய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மேகலேகா	-	மேகவரிசையானது
இவ	-	எவ்வண்ணமோ அவ்வண்ணமே
அஶ்ரு	-	கண்ணீரை
மோக்ஷ்யஸே	-	தேவரீர் பொழியப் போகின்றீர்.

पुत्रस्ते वरदः क्षिप्रमयोध्यां पुनरागतः ।
कराभ्यां मृदुपीनाभ्यां चरणौ पीडयिष्यति ॥

புத்ரஸ்தே வரத: க்ஷிப்ர மயோத்யாம் புனராகத: ।
கராப்யாம் ம்ருது பீநாப்யாம் சரணௌ பீடயிஷ்யதி ॥ 28

தே	-	'தேவரீரது
வரத:	-	எதற்கும் மேம்பட்டதாகிய மோக்ஷஸாம்ராஜ்யத்தைத் தருகிறவனாகிய
புத்ர:	-	திருக்குமாரன்
அயோத்யாம்	-	அயோத்திமாநகருக்கு
புன:	-	மீளவும்
க்ஷிப்ரம்	-	சீக்கிரத்திலேயே
ஆகத:	-	திரும்பி வந்தவனாய்
ம்ருது பீநாப்யாம்	-	மெலிமை தங்கியதும் பருத்துமுள்ள
கராப்யாம்	-	இரு திருக்கரங்களாலும்,
சரணௌ	-	இரு திருவடிகளையும்
பீடயிஷ்யதி	-	தொட்டுத்தழுவித் தண்டம் சமர்ப்பிப்பான்.

अभिवाद्य नमस्यन्तं शूरं ससुहृदं सुतम् ।
मुदास्रैः प्रोक्ष्यसि पुनर्मेघराजिरिवाचलम् ॥

அபிவாத்ய நமஸ்யந்தம் ஶூரம் ஸஸுஹ்ருதம் ஸுதம் ।
முதாஸ்ரை: ப்ரோக்ஷ்யஸி புனர் மேகராஜிரிவாசலம் ॥ 29

அபிவாத்ய	-	'அபிவாதனம் சொல்லி
நமஸ்யந்தம்	-	நமஸ்காரம் பண்ணுகிறவனும்,
ஸஸுஹ்ருதம்	-	கூடஇருந்து கைங்கரியம் செய்த இருவர்கள் (சமேதனாயிருப்பவனும் சீதாலக்ஷ்மண சமேதனாயிருப்பவனும்)
ஶூரம்	-	எதற்கும் சலியா மனமுடையவனுமாகிய
ஸுதம்	-	திருக்குமாரனை
முதா	-	ஆனந்தத்தால்
அஸ்ரை:	-	பாஷ்பங்களால்
மேகராஜி:	-	மழைபொழியும் மேகசமூஹம்,
அசலம்	-	ஓர் மலையில்
இவ	-	எவ்வண்ணமோ அவ்வண்ணமேயும்,
புன:	-	அதற்கு அதிகமாயும்
ப்ரோக்ஷ்யஸி	-	தேவரீர் வருஷிக்கப் போகின்றீர்.'

आश्वासयन्ती विविधैश्च वाक्यैर्वाक्योपचारे कुशलानवद्या ।
रामस्य तां मातरमेवमुक्त्वा देवी सुमित्रा विरराम रामा ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆஶ்வாஸயந்தீ விவிதைஶ்ச வாக்யைர்
வாக்யோப சாரேகுஶலா அனவத்யா।
ராமஸ்ய தாம் மாதரமேவ முக்த்வா
தேவீ ஸுமித்ரா விரராம ராமா ॥ 30

வாக்யோபசாரே	-	சாஸ்திரப்பிரமாண அனுஷ்டானத்தில்
அனவத்யா	-	குறையற்ற
குஶலா	-	நிபுணையானவளும்
ராமா	-	யாவரையும் மனம் குளிரச்செய்யவல்லவளுமாகிய
ஸுமித்ரா	-	ஸுமித்ரா
தேவீ	-	தேவியார்
ராமஸ்ய	-	ஸ்ரீராமரது
மாதரம்	-	தாயாகும்
தாம்	-	அவளை
விவிதை:	-	பலவாறான
வாக்யை: ச	-	மொழிகளைக்கொண்டு
ஏவம்	-	மேற்கண்டவண்ணமாய்
உக்த்வா	-	சொல்லி,
ஆஶ்வாஸயந்தீ	-	ஆச்வாஸம் பண்ணினவளாகி
விரராம	-	மௌனம் அடைந்தனள்.

निशम्य तल्लक्ष्मणमातृवाक्यं रामस्य मातुर्नरदेवपत्न्याः ।
सद्यः शरीरे विननाश शोकः शरद्गतो मेघ इवाल्पतोयः ॥

நிஶம்ய தல்லக்ஷ்மணமாத்ருவாக்யம்
ராமஸ்ய மாதுர் நரதேவ பத்ந்யா:।
ஸத்ய: ஶரீரே விநநாஶ ஶோக:
ஶரத்கதோ மேக இவால்பதோய: ॥ 31

தத் லக்ஷ்மண மாத்ரு வாக்யம்	-	லக்ஷ்மணனது திருத்தாயாரின் அந்த திருவாக்கை
நிஶம்ய	-	உள்ளபடி அறிந்து கொண்டவளும்
நரதேவ பத்ந்யா:	-	சக்கிரவர்த்தியாரின் பட்டமஹிஷியும்
ராமஸ்ய	-	ஸ்ரீராமருடைய
மாது:	-	திருத்தாயாருமாகிய அவளுக்கு
ஶோக:	-	மனத்திலுள்ள சோகமானது
அல்பதோய:	-	ஸ்வல்ப நீரையுடைய
ஶரத்கத:	-	சரத்காலத்திலுண்டாகிய
மேக:	-	மேகமானது
ஶரீரே	-	தனது உடலில்
இவ	-	எவ்வண்ணமோ அவ்வண்ணமே
ஸத்ய:	-	உடனேயே
விநநாஶ	-	தேய்ந்து ஒழிந்துவிட்டது.

இத்யார்ஷே ஸ்ரீமத் ராமாயணே வால்மீகீயே ஆதிகாவ்யே
சதுர்விம்ஶதி ஸஹஸ்ரிகாயாம் ஸம்ஹிதாயாம் அயோத்யா காண்டே
ஸுமித்ராஶ்வாஸனம் நாம சதுஶ்சத்வாரிம்ஶ: ஸர்க: ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பஞ்சசத்வாரிம்ஶ: ஸர்க: - 45

अनुरक्ता महात्मानं रामं सत्यपराक्रमम् ।
अनुजग्मुः प्रयान्तं तं वनवासाय मानवाः ॥

அநுரக்தா மஹாத்மாநம் ராமம் ஸத்யபராக்ரமம் ।
அநுஜக்மு: ப்ரயாந்தம் தம் வனவாஸாய மானவா: ॥ 1

மானவா: - சக்கிரவர்த்தியாரின் அதீனத்திலிருந்த குடிகள், (பிரஜைகள்),
மஹாத்மாநம் - மஹாத்மாவும்,
ஸத்ய பராக்ரமம் - சத்யமான பராக்கிரமத்தை உடையவருமாகிய
ராமம் - ஸ்ரீராமரிடத்தில்
அநுரக்தா: - அசஞ்சல பக்தியுடையவர்களாய்
வனவாஸாய - வனவாஸத்திற்கு
ப்ரயாந்தம் - எழுந்தருளிக்கொண்டிருக்கும்
தம் - அவரை
அநுஜக்மு: - பின்தொடர்ந்து சென்றார்கள்.

निवर्तितेऽपि च बलात्सुहृद्वर्गे च राजनि ।
नैव ते संन्यवर्तन्त रामस्यानुगता रथम् ॥

நிவர்திதே(அ)பி ச பலாத் ஸுஹ்ருத்வர்கே ச ராஜனி ।
நைவ தே ஸந்ந்யவர்தந்த ராமஸ்யாநுகதா ரதம் ॥ 2

ஸுஹ்ருத்வர்கே - தனது கஷ்டம் எதுவாயிருந்தாலும் புத்ரகளத்ரபௌத்ராதிகளின் க்ஷேமத்தையே கோரும் வர்க்கத்தில் ஒருவராகிய
ராஜானி ச - சக்கிரவர்த்தியாரும்
பலாத் - சாஸ்திர விதிகளின் பெருமையால்
நிவர்திதே அபி - திரும்பிவிட்டு இருக்கையிலும்கூட
ராமஸ்ய - ஸ்ரீராமரது
ரதம் - திருத்தேரை
அநுகதா: - பின்பற்றிச் சென்ற
தே - அவர்கள்
ஏவ ச - எல்லோரும்
ஸந்ந்ய வர்தந்த ந - திரும்பவில்லை.

अयोध्यानिलयानां हि पुरुषाणां महायशाः ।
बभूव गुणसंपन्नः पूर्णचन्द्र इव प्रियः ॥

அயோத்யாநிலயாநாம் ஹி புருஷாணாம் மஹாயஶா: । 3
பபூவ குணஸம்பன்ன: பூர்ணசந்த்ர இவ ப்ரிய: ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அயோத்யா நிலயாநாம்	-	அயோத்யாவாசிகளாகிய
புருஷாணாம்	-	மானிடர்களுக்கு
குணஸம்பன்ன:	-	திருக்கல்யாண குணங்களை உடையவரென
மஹாயஶா:	-	மகாபுகழுடைய அவர்
பூர்ண சந்த்ர:	-	பூர்ணசந்திரன்
இவ ஹி	-	போலவே
ப்ரிய:	-	யாவராலும் கொண்டாடப்பட்டவராய்,
பபூவ	-	விளங்கினார்.

स याच्यमानः काकुत्स्थः स्वाभिः प्रकृतिभिस्तदा ।
कुर्वाणः पितरं सत्यं वनमेवान्वपद्यत ॥

ஸ யாச்யமான: காகுத்ஸ்த: ஸ்வாபி: ப்ரக்ருதிபிஸ்ததா।
குர்வாண: பிதரம் ஸத்யம் வனமேவான்வ் பத்யத ॥ 4

ததா	-	அக்காலத்தில்
ஸ:	-	அந்த
காகுத்ஸ்த:	-	ஸ்ரீராமர்,
ஸ்வாபி:	-	தனது
ப்ரக்ருதிபி:	-	பிரஜைகளால்
யாச்யமான: ஏவ	-	பிரார்த்திக்கப்பட்டவராகியும்,
பிதரம்	-	திருத்தாதையை
ஸத்யம்	-	ஸத்தியவாதியாக
குர்வாண:	-	செய்கின்றவராய்,
வனம்	-	வனவாஸத்தில்
அன்வபத்யத	-	திருவுளத்தில் எதற்கும் மேம்பட்டதென ஆசக்தி கொண்டிருந்தனர்.

अवेक्षमाणः सस्नेहं चक्षुषा प्रपिबन्निव ।
उवाच रामः स्नेहेन ताः प्रजाः स्वाः प्रजा इव ॥

அவேக்ஷமாண: ஸஸ்நேஹம் சக்ஷுஷா ப்ரபிபந்நிவ।
உவாச ராம: ஸ்நேஹேந தா: ப்ரஜா: ஸ்வா: ப்ரஜா இவ ॥ 5

ராம:	-	ஸ்ரீராமர்
ப்ரஜா:	-	பிரஜைகளை
ஸஸ்நேஹம்	-	கருணாகடாக்ஷத்துடன்
ஸ்வா:	-	இரத்தசம்பந்தமுள்ள புத்ரபௌத்ரர்களாகிய
ப்ரஜா:	-	பந்துக்களிடத்தில்
இவ	-	எவ்வண்ணமோ அவ்வண்ணமே
தா:	-	அவர்களை
அவேக்ஷமாண:	-	எதிர்நோக்கி
சக்ஷுஷா	-	சக்ஷுரிந்திரியத்தால்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ப்ரபிபந் - குளிரக் கடாக்ஷிக்கின்றவராகி
ஸஸ்நேஹம் இவ - கருணாநிதியென்பதை விளங்கக் காட்டுகின்றதாய்,
உவாச - திருவாய்மலர்ந்தருளினார்.

या प्रीतिर्बहुमानश्च मय्ययोध्यानिवासिनाम् ।
मत्प्रियार्थं विशेषेण भरते सा विधीयताम् ॥

யா ப்ரீதிர் பஹுமானஸ்ச மய்யயோத்யாநிவாஸிநாம் ।
மத்ப்ரியார்தம் விசேஷேண பரதே ஸா விதீயதாம் ॥ 6

மயி - 'என்னிடத்தில்
பஹுமான: ச - ஒரு கௌரவமும்,
அயோத்யாநிவாஸிநாம்- அயோத்யா வாஸிகளுக்கு
யா - எந்த ஒரு
ப்ரீதி: - பக்தியோ
ஸா ச - அதெல்லாமும்
மத் ப்ரியார்தம் - எனக்கிஷ்டமானதை செய்யவேண்டும் என்கிற பக்ஷத்தில்
விசேஷேண - என்னிடத்தில்விட அதிகமாய்
பரதே - பரதனிடத்தில்
நிவேஸ்யதாம் - வைக்கப்படட்டும்.

स हि कल्याणचारित्रः कैकेय्यानन्दवर्धनः ।
करिष्यति यथावद्वः प्रियाणि च हितानि च ॥

ஸ ஹி கல்யாண சாரித்ர: கைகேய்யா நந்த வர்தன: ।
கரிஷ்யதி யதாவத்வ: ப்ரியாணி ச ஹிதாநி ச ॥ 7

ஸ: - 'அவன்
கைகேய்யா நந்த் வர்தன: ஹி - கைகேயீதேவியாரின் இஷ்டத்திற்கு ஈடுபட்டவனாகியும்
கல்யாண சாரித்ர: - திருக்கல்யாண குணங்களுடன் விளங்குகின்றவனாய்
யதாவத் - பூர்வீக அனுஷ்டானங்களில் எள்ளளவும் பிரளாதவனாய்
வ: - உங்களுக்கு
ஹிதாநி ச - நியாயமாயுள்ளவைகளையும்
ப்ரியாணி ச - நன்மைகளையேதரும் காரியங்களையும்
கரிஷ்யதி - புரிவான்.

ज्ञानवृद्धो वयोबालो मृदुर्वीर्यगुणान्वितः ।
अनुरूपः स वो भर्ता भविष्यति भयापहः ॥

ஞானவ்ருத்தோ வயோபாலோ ம்ருதுர்வீர்யகுணான்வித: । 8
அநுரூப: ஸ வோ பர்தா பவிஷ்யதி பயாபஹ: ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ: - 'அவன்
வயோபால: - எந்த தசையிலும் பரிசுத்தமூர்த்தி.
ஞானவ்ருத்த: - ஐஹிக ஆமுஷ்டிக ஞானத்தில் நிபுணன்.
ம்ருது: - எப்படிப்பட்டவரின் மனமும் கோணாது நடக்கின்றவன்.
வீர்யகுணான் வித: - வீர்யகுணமின்னதென்பதை கசடற அறிந்தவன்.
வ: - உங்களுக்கு
பயாபஹ: - எல்லாக் குறைகளையும் தீர்க்கும்
அநுரூப: - எல்லாப்ரகாரத்திலும் கொண்டாடப் பெறுவதற்குரிய
பர்தா - மன்னனாய்
பவிஷ்யதி - விளங்குவான்.

स हि राजगुणैर्युक्तो युवराजः समीक्षितः ।
अपि चापि मया शिष्टैः कार्यं वो भर्तृशासनम् ॥

ஸ ஹி ராஜகுணைர்யுக்தோ யுவராஜ: ஸமீக்ஷித: ।
அபி சாபி மயா ஶிஷ்டை: கார்யம் வோ ப்ர்த்ருஶாஸனம் ॥ 9

ராஜகுணை: - 'மன்னர்களுக்கிருக்க வேண்டிய திருக்கல்யாண குணங்களோடு
யுக்த: - விளங்கிக்கொண்டிருக்கும்
ஸ: - அவன்,
வ: அபி - உங்கள் எல்லோருக்கும்.
யுவராஜ: - யுவராஜாவாக
ஸமீக்ஷித: - நியமிக்கப்பட்டிருக்கின்றான்.
பர்த்ரு ஶாஸனம் ஹி - சக்கிரவர்த்தியாரின் கட்டளையென்றால்
மயா அபி - அடியேனாலும்
ஶிஷ்டை: ச - பெரியோர்களாகிய உங்களாலும்
கார்யம் - பத்திமைகொண்டு அனுஷ்டிக்க வேண்டியது.

न संतप्येद्यथा चासौ वनवासं गते मयि ।
महाराजस्तथा कार्यो मम प्रियचिकीर्षया ॥

ந ஸந்தப்யேத்யதா சாஸௌ வனவாஸம் கதே மயி ।
மஹாராஜஸ்ததா கார்யோ மம ப்ரிய சிகீர்ஷயா ॥ 10

மம - 'எனக்கு
ப்ரியசிகீர்ஷயா - இஷ்டமானபடி நடந்துகொள்ள வேண்டுமெனும் உத்தேசமிருக்குமானால்
மயி - நான்
வனவாஸம் - வனவாஸமாய்
கதே - போனபின்னர்
அஸௌ - இந்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மஹாராஜ: - சக்கிரவர்த்தியார்
யதா - எவ்வண்ணமிருந்தால்
ஸந்தப்யேத் ந - மனவருத்தமடையாமலிருப்பாரோ,
ததா ச - அவ்வண்ணமே
கார்ய: - நீங்கள் நடந்துகொள்ள வேண்டியது.

यथा यथा दाशरथिर्धर्म एव स्थितोऽभवत् ।
तथा तथा प्रकृतयो रामं पतिमकामयन् ॥

யதா யதா தாசரதிர்தர்ம ஏவ ஸ்திதோऽபவத் ।
ததா ததா ப்ரக்ருதயோ ராமம் பதிமகாமயன் ॥ 11

தாஶரதி: - ஸ்ரீராமர்
தர்மே ஏவ - தருமமொன்றிலேயே
ஸ்தித: - ஈடுபட்டவராய்
யதா யதா - எவ்வளவுக்கெவ்வளவு
அபவத் - விளங்கினாரோ
ததா ததா - அவ்வளவுக்கவ்வளவு
ப்ரக்ருதய: - ஜனங்கள்
ராமம் - ஸ்ரீராமரை
பதிம் - மன்னராக
அகாமயன் - எதற்கும் மேம்பட்ட மனோரதமாய்க் கொண்டார்கள்.

बाष्पेण पिहितं दीनं रामः सौमित्रिणा सह ।
चकर्षेव गुणैर्बद्धं जनं पुरनिवासिनम् ॥

பாஷ்பேண பிஹிதம் தீனம் ராம: ஸௌமித்ரிணா ஸஹ ।
சகர்ஷேவ குணைர் பத்தம் ஜனம் புரநிவாஸினம் ॥ 12

ஸௌமித்ரிணா - லக்ஷ்மணனோடு
ஸஹ - கூடியிருந்த
ராம: - ஸ்ரீராமர்
பாஷ்பேண - கண்ணீரால்
பிஹிதம் - முகம் வாடியவர்களும்
தீனம் - கஷ்டதசையிலிருக்கின்றவர்களும்,
புரநிவாஸினம் - நகரவாஸிகளுமாகிய
ஜனம் - ஜனங்களை
குணை: - தன்னை விட்டுவிட வேண்டியதாயுள்ள காரணங்களைக்கொண்டு (கயிற்றால்)
பத்வா - மறுத்தும் (கட்டப்பட்டு போல)
சகர்ஷ - இழுத்தார்
இவ - போல் முடிந்தது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ते द्विजास्त्रिविधं वृद्धा ज्ञानेन वयसौजसा ।
वय:प्रकम्पशिरसो दूरादूचुरिदं वच: ॥

தே த்விஜாஸ்த்ரிவிதம் வ்ருத்தா ஞானேன வயஸௌஜஸா ।
வய: ப்ரகம்பஶிரஸோ தூராதூசுரிதம் வச: ॥ 13

ஞானேன - ஞானத்தாலும்,
வயஸா - பருவத்தாலும்,
ஓஜஸா - தவத்தினாலும்,
த்ரிவிதம் - இம்மூன்றிலும்
வ்ருத்தா: தே - முதிர்ந்தவர்களாய் அங்கிருந்த
த்விஜா: - பிராமணர்கள்,
வய: ப்ரகம்ப ஶிரஸ: - கிழத்தன்மையாலாட்டம்கொண்ட சிரசுகளை உடையவர்களாய்
தூராத் - தூரத்திலிருந்தே
இதம் - பின்வரும்
வச: - மொழியை
ஊசு: - சொன்னார்கள்.

वहन्तो जवना रामं भो भो जात्यास्तुरङ्गमा: ।
निवर्तध्वं न गन्तव्यं हिता भवत भर्तरि ॥

வஹந்தோ ஜவநா ராமம் போபோ ஜாத்யாஸ்துரங்கமா: ।
நிவர்தத்வம் ந கந்தவ்யம் ஹிதா பவத பர்தரி ॥ 14

போ போ - 'ஓ! ஓ!
ராமம் - ஸ்ரீராமனை
வஹந்த: - எழுந்தருளப் பண்ணிப் போகின்ற
ஜாத்யா: - உத்கிருஷ்டங்களாகிய
ஜவநா: - பத்தியங்களில் பரிசுபெற்ற
துரங்கமா: - குதிரைகளே!
கந்தவ்யம் ந - நடந்துபோவது நியாயமன்று.
நிவர்தத்வம் - நீங்கள் திரும்பி விடுங்கள்.
பர்தரி - வாத்ஸல்யத்துடன் போஷிக்கும் யஜமானனிடத்தில்
ஹிதா: - கிருதக்ஞதையுடையவர்களாக
பவத - நீங்கள் ஆகக்கடவீர்கள்.

कर्णवन्ति हि भूतानि विशेषेण तुरङ्गमा: ।
यूयं तस्मान्निवर्तध्वं याचनां प्रतिवेदिता: ॥

கர்ணவந்தி ஹி பூதானி விசேஷேண துரங்கமா: ।
யூயம் தஸ்மான் நிவர்தத்வம் யாசநாம் ப்ரதிவேதிதா: ॥ 15

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பூதானி - 'உயிர்கள்
கர்ணவந்தி - செவிப்புலனுள்ளவைகள்.
துரங்கமா: ஹி - குதிரைகளோ
விசேஷேண - எல்லாவற்றையும்விட அதிகமாயுள்ளவைகள்.
தஸ்மாத் - ஆகையால்
யூயம் - நீங்கள்
யாசநாம் - 'வேண்டுகோளுக்கு
ப்ரதிவேதிதா: - உடன்பட்டவர்களாய்
நிவர்தத்வம் - திரும்பிவிடக் கடவீர்கள்.

धर्मतः स विशुद्धात्मा वीरः शुभदृढव्रतः ।
उपवाह्यस्तु वो भर्ता नापवाह्यः पुराद्वनम् ॥

தர்மத: ஸ விசுத்தாத்மா வீர: ஶுபத்ருடவ்ரத: ।
உபவாஹ்யஸ்து வோ பர்தா நாபவாஹ்ய: புராத்வனம் ॥ 16

வ: - 'உங்களுடைய
பர்தா - யஜமானன்
விசுத்தாத்மா - பரிசுத்தமூர்த்தி.
ஶுபத்ருடவ்ரத: - யாருக்கும் நன்மையையே விளைவிக்கும் விருதத்தை திருடமாய் கொண்டவர்.
வீர: - எல்லா உயிர்ப்பிராணிகளிடத்திலும் தயையுள்ள தயாவீரன்.
து - ஆனபடியால்
ஸ: - அவர்
தர்மத: - நியாயமாய்
உபவாஹ்ய: - ஊரைநோக்கி வஹித்துக்கொண்டுபோக வேண்டியவர்.
புராத் - நகரத்திலிருந்து
வனம் - காட்டைநோக்கி
அபவாஹ்ய: ந - வெளியில் வஹித்துப் போக உரியவராகார்.'

एवमार्तप्रलापांस्तान् वृद्धान् प्रलपतो द्विजान् ।
अवेक्ष्य सहसा रामो रथादवततार ह ॥

ஏவ மார்த ப்ரலாபாம்ஸ்தாந் விருத்தான் ப்ரலபதோ த்விஜாந் ।
அவேக்ஷ்ய ஸஹஸா ராமோ ரதாதவததார ஹ ॥ 17

ஸ: - அந்த
ராம: - ஸ்ரீராமர்
தாந் - அந்த
விருத்தான் - பெரியோர்களாகிய
த்விஜாந் - அந்தணர்களை
ஏவம் - மேற்கண்டவண்ணமாய்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆர்த ப்ரலாபான் - மனவேதனையால் புலம்பிக் கொண்டிருக்கின்றவர்களாய்
ப்ரலபத: - உளறல்மொழிகளைமொழிந்து கொண்டிருக்கின்றவர்களாய்,
அவேக்ஷ்ய - திருவுளத்தில் பற்றி,
ஸஹஸா - சடக்கென
ரதாத் - ரதத்தினின்று
அவததார - கீழிறங்கினார்.

पद्भ्यामेव जगामाथ ससीतः सहलक्ष्मणः ।
संनिकृष्टपदन्यासो रामो वनपरायणः ॥

பத்ப்யாமேவ ஜகாமாத ஸஸீத: ஸஹலக்ஷ்மண: ।
ஸந்நிக்ருஷ்ட பதன்யாஸோ ராமோ வனபராயண: ॥ 18

ஸஸீத: - ஸீதையுடனும்,
ஸஹலக்ஷ்மண: - லக்ஷ்மணனுடனும்,
வனபராயண: - வனவாஸத்தை தீர்மானமாய் திருவுளத்தில் கொண்டருளிய
ராம: - ஸ்ரீராமர்
அத - இந்த ப்ரசக்தியில்
பத்ப்யாமேவ - திருவடி சாத்தி
ஸந்நிக்ருஷ்ட பதன்யாஸ: } - அவர்கள் சமீபத்திற்கு என்கிறபடி அதிக வேகமும் அதிக தாமதமுமின்றி நடக்கின்றவராகி
ஜகாம - எழுந்தருளினார்.

द्विजातीन् हि पदातींस्तान् रामश्चारित्रवत्सलः ।
न शशाक घृणाचक्षुः परिमोक्तुं रथेन सः ॥

த்விஜாதீன் ஹி பதாதீன் தான் ராமஶ் சாரித்ர வத்ஸல: ।
ந ஶஶாக க்ருணாசக்ஷு: பரி மோக்தும் ரதேன ஸ: ॥ 19

ஸ: - அந்த
சாரித்ர வத்ஸல: - நல்லொழுக்கத்தில் அசஞ்சல பக்தியுடையவரும்
க்ருணாசக்ஷு: - தண்ணளி தேஜோமயமாய் விளங்கும்
ராம: - ஸ்ரீராமர்
ரதேன - திருத்தேர் மீதிருந்துகொண்டு
பதாதீன் - கால்நடையாய் வந்துகொண்டிருக்கும்
தான் - அந்த
த்விஜாதீன் ஹி - பிராமணர்களையும்
பரிமோக்தும் - திரும்பச்செய்ய
ஶஶாக ந - திருவுளம் கொள்ளவில்லை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

गच्छन्तमेव तं दृष्ट्वा रामं संभ्रान्तचेतसः ।

ऊचुः परमसंतप्ता रामं वाक्यमिदं द्विजाः ॥

கச்சந்தமேவ தம் த்ருஷ்ட்வா ராமம் ஸம்ப்ராந்தசேதஸ: ।
ஊசு: பரம ஸந்தப்தா ராமம் வாக்யமிதம் த்விஜா: ॥ 20

பரம ஸந்தப்தா: - மிக்கத் தளர்வு அடைந்தவர்களாய்
ஸம்ப்ராந்த சேதஸ: - மனம் திகைத்தவர்களாயிருந்த
த்விஜா: - அந்தணர்கள்
தம் - அந்த
ராமம் - ஸ்ரீராமரை
கச்சந்தம் ஏவ - திருவடி சாத்தி எழுந்தருளிக் கொண்டிருந்தவராய்
த்ருஷ்ட்வா - கவனித்து,
ராமம் - ஸ்ரீராமரைப் பார்த்து
இதம் - பின்வரும்
வாக்யம் - விண்ணப்பத்தை
ஊசு: - அருளிச் செய்தார்கள்.

ब्राह्मण्यं कृत्स्नमेतत्त्वां ब्रह्मण्यमनुगच्छति ।

द्विजस्कन्धाधिरूढास्त्वामग्नयोऽप्यनुयान्त्यमी ॥

ப்ராஹ்மண்யம் க்ருத்ஸ்ந மேதத்த்வாம் ப்ரஹ்மண்யமநுகச்சதி ।
த்விஜஸ்கந்தாதி ரூடாஸ்த்வா மக்நயோऽப்யநு யாந்த்யமீ ॥ 21

ஏதத் - 'இந்த
ப்ராஹ்மண்யம் - வேதியர்களின் திரள்
க்ருத்ஸ்னம் - எல்லாமும்
ப்ரஹ்மண்யம் - வேதப்ரதிபாத்யராகும்
த்வாம் - தேவரீரை
அநுகச்சதி - பின்தொடர்ந்து வருகின்றன.
அமீ - இந்த
அக்நய: அபி - கார்ஹபத்யம், ஆஹவனீயம், தக்ஷிணம், என்னும் அக்னிகள் எல்லாமும்
த்விஜஸ்கந்தாதிரூடா: - பிராமணர்களின் தோளின்மீது வஹிக்கப் பெற்றவைகளாய்
த்வாம் - தேவரீரை
அநுயாந்தி - பின்தொடர்ந்து வருகின்றன.

वाजपेयसमुत्थानि छत्राण्येतानि पश्य नः ।

पृष्ठतोऽनुप्रयातानि हंसानिव जलात्यये ॥

வாஜபேய ஸமுத்தானி சத்ராண்யேதாநி பஶ்ய ந: ।
ப்ருஷ்டதோऽநு ப்ரயாதானி ஹம்ஸா நிவ ஜலாத்யயே ॥ 22

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வாஜபேய ஸமுத்தானி - 'வாஜபேய யாகங்களில் கிடைத்தவைகளும்
ஜலாத்யயே - ஜலம் வரண்டுவிட்ட காலத்தில்
ஹம்ஸான் - ஹம்ஸங்களை
இவ - போலாகிவிட்டவைகளும்,
ந: - எங்களது
ப்ருஷ்டத: } அநுப்ரயாதானி - பின்பற்றித் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றவைகளுமாகிய
ஏதானி சத்ராணி - இந்த குடைகளை
பஶ்ய - தேவரீர் திருவுள்ளம் பற்றியருள்வீராக.

अनवाप्तातपत्रस्य रश्मिसंतापितस्य ते ।
एभिश्छायां करिष्यामः स्वैश्छत्रैर्वाजपेयिकैः ॥

அனவாப்தாதபத்ரஸ்ய ரஶ்மிஸந்தாபிதஸ்ய தே।
ஏபிஸ்சாயாம் கரிஷ்யாம: ஸ்வைஶ்சத்ரைர் வாஜபேயிகை:॥ 23

அனவாப்தா தபத்ரஸ்ய - 'குடை இல்லாதவராய்
ரஶ்மிஸந்தாபிதஸ்ய - ஸூர்யகிரணங்களால் வாடிக்கொண்டிருக்கும்
தே - தேவரீருக்கு
ஏபி: - இந்த
ஸ்வை: - எங்களுக்குச் சொந்தமாயுள்ள
வாஜபேயிகை: - வாஜபேய யாகங்களில் பெறப்பட்ட
சத்ரை: - குடைகளால்
சாயாம் - வெயிலில் திருமேனி வாடாதிருக்கும் கைங்கரியத்தை
கரிஷ்யாம: - நாங்கள் செய்து கிருதார்த்தர்களாகுவோம்.

या हि नः सततं बुद्धिर्वेदमन्त्रानुसारिणी ।
त्वत्कृते सा कृता वत्स वनवासानुसारिणी ॥

யா ஹி ந: ஸததம் புத்திர் வேத மந்த்ராநு ஸாரிணீ।
த்வத் க்ருதே ஸா க்ருதா வத்ஸ வனவாஸாநுஸாரிணீ॥ 24

வத்ஸ - 'ஸர்வகர்மசமாராத்ய!
ந: - எங்களது
யா - எந்த ஒரு
புத்தி: - மனக்கூர்மை
ஸததம் - எக்காலத்திலும் இடைவிடாது
வேத மந்த்ராநு ஸாரிணீ - வேதமந்திரங்கள் ஓதுவதினால் எந்த ஒரு பொருளை
ஹி - காணமுயன்றதோ
ஸா - அது
த்வத் க்ருதே - தேவரீர் காரணமாய்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வனவாஸாநுஸாரிணீ	-	வனவாஸம் கொண்டவரை பின்பற்றியே வந்துவிட்டதாக
க்ருதா	-	ஆகிவிட்டது.

हृदयेष्ववतिष्ठन्ते वेदा ये नः परं धनम् ।
वत्स्यन्त्यपि गृहेष्वेव दाराश्चारित्ररक्षिताः ॥

ஹ்ருதயேஷ்வவ திஷ்டந்தே வேதா யே ந: பரம் தனம் ।
வத்ஸ்யந்த்யபி க்ரஹேஷ்வேவ் தாராஶ்சாரித்ரரக்ஷிதா: ॥ 25

யே	-	'எந்த
வேதா:	-	வேதங்கள்
ந:	-	எங்களது
ஹ்ருதயேஷு	-	ஹிருதயங்களில்
அவதிஷ்டந்தே	-	குடிகொண்டிருக்கின்றனவோ,
பரம் ஏவ	-	அவைகளைக் காட்டிலும்
தனம்	-	பெரும் பாக்யம் தேவரீர்
தாரா:	-	மனைவிமார்கள்
சாரித்ர ரக்ஷிதா:	-	பதிவ்ரதா தர்மத்தால் காக்கப்பெற்றவர்களாய்
க்ருஹேஷு அபி	-	வீடுகளிலேயே
வத்ஸ்யந்தி	-	வஸிக்கப் போகின்றார்கள்.

न पुनर्निश्चयः कार्यस्त्वद्गतौ सुकृता मतिः ।
त्वयि धर्मव्यपेक्षे तु किं स्याद्धर्ममपेक्षितुम् ॥

ந புனர் நிஶ்சய: கார்யஸ்த்வத்கதௌ ஸுக்ருதா மதி: ।
த்வயி தர்மவ்யபேக்ஷே து கிம் ஸ்யாத் தர்மமபேக்ஷிதும் ॥ 26

த்வத்கதௌ	-	'தேவரீருக்கு தற்காலம் சம்பவித்திருக்கிற காரியத்தில்
நிஶ்சய:	-	திருவுளத்தில்தீர்மானமாய்க்கொண்டருளியிருக்கிறது
கார்ய: ந	-	செய்யாது நிறுத்திவிடவேண்டும்.
தர்மவ்யபேக்ஷே	-	தர்மத்தில் அசஞ்சலபற்றுடைய
த்வயி	-	தேவரீரிடத்தில்
ஸுக்ருதா	-	ஸர்வமுமாகிற
மதி:	-	பிரார்த்தனை இது:
புன: து	-	இல்லை என்றால்
தர்மம்	-	இவ்வுலகில் செய்ய வேண்டியதாயுள்ள கடமையை
அபேக்ஷிதும்	-	செய்து முடிக்க வேண்டியதாய்
கிம் ஸ்யாத்	-	வேறு எது இருக்கிறது?

याचितो नो निवर्तस्व हंसशुक्लशिरोरुहैः ।
शिरोभिर्निभृताचार महीपतनपांसुलैः ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

யாசிதோ நோ நிவர்தஸ்வ ஹம்ஸ ஶுக்ல சிரோருஹை: ।
ஶிரோபிர்நிப்ருதாசார மஹீபதந பாம்ஸுலை: ॥ 27

நிப்ருதாசார - 'மாறாத தர்மானுஷ்டானமுடையவரே!
ஹம்ஸ சுக்ல சிரோருஹை:- அன்னப்பறவைபோல் வெளுத்த தலைமயிருகளையுடையவைகளும்
மஹீபதந பாம்ஸுலை:- தரையில் விழுந்து புழுதிமண்டி இருக்கின்றவைகளுமான
ஶிரோபி: - முடிகளைத் தாழ்த்தி
யாசித: - பிரார்த்திக்கப்பட்டவராகிய தேவரீர்
ந: - அடியேங்களுக்காக
நிவர்தஸ்வ - திரும்பி எழுந்தருளக் கடவீர்.

बहूनां वितता यज्ञा द्विजानां य इहागताः ।
तेषां समाप्तिरायत्ता तव वत्स निवर्तने ॥

பஹூநாம் விததா யஞா த்விஜாநாம் ய இஹாகதா: ।
தேஷாம் ஸமாப்திராயத்தா தவ வத்ஸ நிவர்தனே ॥ 28

வத்ஸ - 'ஸர்வகர்மசமாராத்ய!
பஹூநாம் - பெரியோர்களாகிய
த்விஜாநாம் - பிராமணர்களுடைய
ஆகதா: - கார்யங்களாய்
விததா: - அனுஷ்டிக்கப்பட்டவைகளாகிய
யஞா: - அந்தணர்களுக்குரிய பூத, மனுஷ்ய, பித்ரு, தேவ, பிரம்ம என்ற பஞ்சமகாயக்ஞுங்கள்
யே - எவைகளோ
தேஷாம் - அவைகளுக்கு
இஹ - இவ்வுலகில்
ஸமாப்தி: - கோரிய பயனென்பது
தவ - தேவரீருடைய
நிவர்தனே - திரும்பி எழுந்தருளுவதில்
ஆயத்தா - நிலைபெற்றிருக்கிறது.

भक्तिमन्ति हि भूतानि जङ्गमाजङ्गमानि च ।
याचमानेषु तेषु त्वं भक्तिं भक्तेषु दर्शय ॥

பக்திமந்தி ஹி பூதானி ஜங்கமாஜங்கமானி ச । 29
யாசமானேஷு தேஷு த்வம் பக்திம் பக்தேஷு தர்ஶய ॥

ஜங்கமா ஜங்கமானி ஹி- 'அசையும் பொருள்களும் அசையாப் பொருள்களும்
பூதானி ச - உயிர்களெல்லாமும்
பக்தி மந்தி - தேவரீரிடத்தில் அசஞ்சல பக்தி வைத்தவைகள்.
பக்தேஷு - பக்தர்களும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

யாசமானேஷு - பிரார்த்திக்கின்றவர்களுமாகிய
தேஷு - அவர்களிடத்தில்
த்வம் - தேவரீர்
பக்திம் - मित्रभावे संप्राप्तं न त्यजेयं कथञ्चन
(மித்ர பாவேனஸம்ப்ராப்தம்
ந த்யேஜம் கதஞ்சன)
எனும்இயற்கையாயுள்ள
பண்பை பண்பை
தர்ஶய - நிரூபித்தருள்வீராக.

अनुगन्तुमशक्तास्त्वां मूलैरुद्धतवेगिनः ।
उन्नता वायुवेगेन विक्रोशन्तीव पादपाः ॥
அநுகந்தும ஶக்தாஸ்த்வாம் மூலைருத்ததவேகின: ।
உன்னதா வாயுவேகேந விக்ரோஶந்தீவ பாதபா: ॥ 30

பாதபா: - 'விருக்ஷங்கள்
மூலை: - வேர்களால்
த்வாம் - தேவரீரை
அநுகந்தும் - கூடவே தொடர்ந்து வர
அஶக்தா: - திறமையற்றவைகளாய்
உன்னதா: - உயரத் தூக்கிக் கொண்டவண்ணமே
இருக்கின்றவைகளாய்
வாயு வேகேந - காற்றுமூலமாய்
உத்தத வேகின: இவ - படும்கடும்துயரத்தைக்காட்டுகின்றவைகள்போல
விக்ரோஶந்தி - கதறுகின்றன.'

निश्चेष्टाहारसंचारा वृक्षैकस्थानविष्ठिताः ।
पक्षिणोऽपि प्रयाचन्ते सर्वभूतानुकम्पिनम् ॥
நிஶ்சேஷ்டாஹார ஸஞ்சாரா வ்ருகைஷ கஸ்தானவிஷ்டிதா: ।
பக்ஷிணோऽபி ப்ரயாசந்தே ஸர்வ பூதாநு கம்பினம் ॥ 31

பக்ஷிண: அபி - 'பக்ஷிகளும்
வ்ருகைஷ கஸ்தான விஷ்டிதா: - மரங்களின்மேல் இருந்த இடமொன்றிலேயே இருக்கின்றவைகளாய்
நிஶ்சேஷ்டா ஹார ஸஞ்சாரா: - படும்துன்பத்தால் அசையமுடியாதவைகளாய்
ஸர்வ பூதாநு கம்பினம் - எல்லாப் பிராணிகளுக்கும் கருணைக்
கடலாகும் தேவரீரை
ப்ரயாசந்தே - வருந்திப் பிரார்த்திக்கின்றன.

एवं विक्रोशतां तेषां द्विजातीनां निवर्तने ।
ददृशे तमसा तत्र वारयन्तीव राघवम् ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஏவம் விக்ரோஶதாம் தேஷாம் த்விஜாதீனாம் நிவர்தனே ।
தத்ருஶே தமஸா தத்ர வாரயந்தீவ ராகவம் ॥ 32

தேஷாம் - இந்த
த்விஜாதீனாம் - பிராமணர்கள்
நிவர்தனே - திரும்பிவிடும் விஷயத்தில்
ஏவம் - மேற்கண்டவண்ணமாய்
விக்ரோஶதாம் - மொழிகையில்
தத்ர - அவ்விடத்திலேயே
தமஸா - தமஸாநதியானது
ராகவம் - ஸ்ரீராமனை
வாரயந்தி - குறுக்கிட்டுத் தடுப்பது
இவ - போன்றதாய்
தத்ருஶே - காணப்பட்டது.

ततः सुमन्त्रोऽपि रथाद्विमुच्य श्रान्तान् हयान् संपरिवर्त्य शीघ्रम् ।

पीतोदकांस्तोयपरिप्लुताङ्गानचारयद्वै तमसाविदूरे ॥

தத: ஸுமந்த்ரோऽபி ரதாத்விமுச்ய
ஶ்ராந்தான் ஹயான் ஸம்பரிவர்த்ய ஶீக்ரம் ।
பீதோதகாம்ஸ் தோய பரிப்லுதாங்கா
நசாரயத் வை தமஸாவிதூரே ॥ 33

தத: - அவ்விடத்தில்
ஸுமந்த்ர: அபி - ஸுமந்திரரும்,
ஶ்ராந்தான் ஹயான் - களைத்திருந்த குதிரைகளை
ரதாத் - தேரினின்று
விமுச்ய - அவிழ்த்து,
ஶீக்ரம் - உடனேயே
ஸம்பரிவர்த்ய - நன்றாய் புரண்டெழச் செய்து,
பீதோதகான் - தாகநீர் குடித்தவைகளாய்,
தோய பரிப்லுதாங்காந் - அங்கமெல்லாம் தேய்த்துக் குளிப்பாட்டப் பட்டவைகளாய்
தமஸா விதூரே வை - தமஸையின் கரையிலேயே
அசாரயத் - மேயவிட்டார்.

இத்யார்ஷே ஸ்ரீமத் ராமாயணே வால்மீகீயே ஆதிகாவ்யே
சதுர்விம்ஶதி ஸஹஸ்ரிகாயாம் ஸம்ஹிதாயாம் அயோத்யா காண்டே
பௌரயாசனம் நாம பஞ்சசத்வாரிம்ஶ: ஸர்க: ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஷட்சத்வாரிம்ஶ: ஸர்க: - 46

ततस्तु तमसातीरं रम्यमाश्रित्य राघवः ।
सीतामुद्वीक्ष्य सौमित्रिमिदं वचनमब्रवीत् ॥
ததஸ்து தமஸாதீரம் ரம்யமாஶ்ரித்ய ராகவ: ।
ஸீதாமுத்வீக்ஷ்ய ஸௌமித்ரிமிதம் வசனமப்ரவீத் ॥ 1

ராகவ: து - ஸ்ரீராமரும்
ரம்யம் - மனோஹரமாய் விளங்கிய
தமஸா தீரம் - தமஸாநதியின் கரையை
ஆஶ்ரித்ய - அடைந்து,
ஸீதாம் - ஸீதாப்பிராட்டியாரை
உத்வீக்ஷ்ய - உத்தேசித்து,
தத: - அக்காரணத்தால்
ஸௌமித்ரிம் - ஸௌமித்திரியை நோக்கி
இதம் - பின்வரும்
வசனம் - திருவாக்கை
அப்ரவீத் - திருவாய் மலர்ந்தருளினார்.

इयमद्य निशा पूर्वा सौमित्रे प्रस्थिता वनम् ।
वनवासस्य भद्रं ते स नोत्कण्ठितुमर्हसि ॥
இயமத்ய நிஶா பூர்வா ஸௌமித்ரே ப்ரஸ்திதா வனம் ।
வனவாஸஸ்ய பத்ரம் தே ஸ நோத்கண்டிதுமர்ஹஸி ॥ 2

ஸௌமித்ரே - 'சுமித்திராதேவியாரது திருக்குமார!
வனம் - வனவாசத்தில்
வனவாஸஸ்ய - காடுகாடாகத் திரிந்து காலங்கழிப்பதற்கு
அத்ய - இன்றைய
இயம் - இந்த
நிஶா - இரவு
பூர்வா - பிரதமமாக
ப்ரஸ்திதா - வந்துவிட்டது.
பத்ரம் - காரியப் பொறுப்பு
தே ச - உன்னுடையதுதான்.
உத்கண்டிதும் - மனம் சஞ்சலப்பட்டுக் கொண்டிருப்பதற்கு
அர்ஹஸி ந - நீ இடங்கொடாதே.

पश्य शून्यान्यरण्यानि रुदन्तीव समन्ततः ।
यथा निलयमायद्भिर्निलीनानि मृगद्विजैः ॥
பஶ்ய ஶூன்யாந்யரண்யானி ருதந்தீவ ஸமந்தத: ।
யதாநிலயமாயத்பிர்நிலீநாநி ம்ருகத்விஜை: ॥ 3

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அரண்யானி - காட்டு உயிர்கள்
யதாநிலயம் - அதது இரவில் தங்குமிடத்திற்கு
ஆயத்பி: - வந்துசேர்ந்த
ம்ருகத்விஜை: - மிருகங்களாலும் பக்ஷிகளாலும்
நிலீநாநி - அவைகளுக்கு வெளியிலிருந்து தீங்கு வராத வண்ணமாய் மறைக்கப்பட்டவைகளாய்
இவ - முற்றிலும்
ஶூன்யாநி - சூதுசெய்யாதவைகளாய்
ஸமந்தத: - எல்லா திக்குகளிலும்
ருதந்தீ - சத்தமிடுகின்றன;
பஶ்ய - நீ கவனித்துப் பார்.

अद्यायोध्या तु नगरी राजधानी पितुर्मम ।
सस्त्रीपुंसाऽऽगतानस्माञ्शोचिष्यति न संशयः ॥

அத்யாயோத்யா து நகரீ ராஜதானீ பிதுர்மம ।
ஸஸ்த்ரீபும்ஸாऽऽ கதாநஸ்மாஞ் ஶோசிஷ்யதி ந ஸம்ஶய: ॥ 4

பிது: - 'திருத்தந்தையின்
ராஜதானீ - இராஜதானியாகிய
அயோத்யா நகரீ - அயோத்திமாநகர்
ஸஸ்த்ரீ பும்ஸா து - ஆண்பெண்ணடங்கலாயெல்லாமும்,
ஆகதாந் - இங்குவந்துவிட்ட
அஸ்மான் - நம்மை நினைந்து
அத்ய - இப்பொழுது
ஶோசிஷ்யதி - துயரப்பட்டுக் கொண்டிருக்கும்
மம - எனக்கு
ஸம்ஶய: ந - இவ்விஷயத்தில் ஐயமில்லை.

अनुरक्ता हि मनुजा राजानं बहुभिर्गुणैः ।
त्वां च मां च नरव्याघ्र शत्रुघ्नभरतौ तथा ॥

அநுரக்தா ஹி மனுஜா ராஜாநம் பஹுபிர்குணை: ।
த்வாம் ச மாம் ச நரவ்யாக்ர ஶத்ருக்ந பரதௌ ததா ॥ 5

நரவ்யாக்ர - 'புருஷோத்தம!
மனுஜா: - ஜனங்கள்
ராஜாநம் - சக்கிரவர்த்தியாரிடத்திலும்,
மாம் ச - என்னிடத்திலும்,
த்வாம் ச - உன்னிடத்திலும்
ஶத்ருக்ந பரதௌ ததா - பரதசத்ருக்னர்களிடத்திலும்,
பஹுபி: - விசேஷமான
குணை: ஹி - திருக்கல்யாண குணங்களினாலேயே
அநுரக்தா: - அசஞ்சலபத்திமையுடையவர்களாய் இருக்கிறார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

पितरं चानुशोचामि मातरं च यशस्विनीम् ।
अपि वान्धौ भवेतां तु रुदन्तौ तावभीक्ष्णशः ॥

பிதரம் சாநுஶோசாமி மாதரம் ச யஶஸ்விநீம் ।
அபி வா அந்தௌ பவேதாம் து ருதந்தௌ தாவபீக்ஷ்ணஶ: ॥ 6

பிதரம் ச - 'திருத்தந்தையாரைக் குறித்தும்
யஶஸ்விநீம் - மாதுசிரோமணியாகும்
மாதரம் ச - திருத்தாயைக் குறித்தும்,
அநுஶோசாமி - நான் மிக்கச் சோகிக்கின்றேன்.
அபீக்ஷ்ணஶ: - இடைவிடாமல்
ருதந்தௌ து - அழுதவண்ணமேயிருக்கும்
தௌ அபி - அவ்விருவர்களும்
அந்தௌ - திருஷ்டி இழந்தவர்களாய்
பவேதாம் வா - ஆய்விடுவார்களோ என்னவோ!

भरतः खलु धर्मात्मा पितरं मातरं च मे ।
धर्मार्थकामसहितैर्वाक्यैराश्वासयिष्यति ॥

பரத: கலு தர்மாத்மா பிதரம் மாதரம் ச மே ।
தர்மார்த காம ஸஹிதைர் வாக்யைராஶ்வாஸயிஷ்யதி ॥ 7

கலு - 'என்றாலும் விச்ராமம் ஒன்றுண்டு.
தர்மாத்மா - தர்மாத்மாவாகிய
பரத: - பரதன்,
பிதரம் - தந்தையையும்
மே - எனது
மாதரம் ச - தாயையும்
தர்மார்த காம ஸஹிதை:- தர்மம் ஒன்றுதான் சர்வமுமாய் கோர வேண்டுமென்பதை நன்கு விளங்கக் காட்டுகின்ற
வாக்யை: - சித்தாந்தங்களால்
ஆஶ்வாஸயிஷ்யதி - தேற்றி சோகத்தையாற்றுவான்.

भरतस्यानृशंसत्वं सञ्चिन्त्याहं पुनः पुनः ।
नानुशोचामि पितरं मातरं चापि लक्ष्मण ॥

பரதஸ்யாந்ருஶம்ஸத்வம் ஸஞ்சித்யாஹம் புன: புன: ।
நாநு ஶோசாமி பிதரம் மாதரம் சாபி லக்ஷ்மண ॥ 8

லக்ஷ்மண - 'லக்ஷ்மணா!
பரதஸ்ய - பரதனுடைய
ஆந்ருஶம்ஸத்வம் - தண்ணளி ஸ்வபாவத்தை
புன: புன: - அடிக்கடி
ஸஞ்சித்ய - கவனித்து,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அஹம் - நான்
பிதரம் - தந்தையாரைக் குறித்தும்
மாதரம் ச - தாயாரைக் குறித்தும்
அபி - சில சமயங்களில்
அநுஶோசாமி ந - மனச்சஞ்சலமில்லாதவனாகின்றேன்.

त्वया कार्यं नरव्याघ्र मामनुव्रजता कृतम् ।
अन्वेष्टव्या हि वैदेह्या रक्षणार्थे सहायता ॥

த்வயா கார்யம் நரவ்யாக்ர மாமநுவ்ரஜதா க்ருதம் ।
அன்வேஷ்டவ்யா ஹி வைதேஹ்யா ரக்ஷணார்தே ஸஹாயதா ॥ 9

நரவ்யாக்ர - 'புருஷோத்தம!
வைதேஹ்யா: - ஜானகிக்கு
ரக்ஷணார்தே - தீங்குவராதவண்ணம் பாதுகாக்கும் விஷயத்தில்
ஸஹாயதா - துணை
அன்வேஷ்டவ்யா - தேவை.
ஹி - ஆனபடியால்
மாம் - என்னை
அநுவ்ரஜதா - பின்தொடர்ந்துவந்த
த்வயா - உன்னால்
கார்யம் - செய்யவேண்டியதாகிய
க்ருதம் - கடமை இது.

अद्भिरेव तु सौमित्रे वत्स्याम्यद्य निशामिमाम् ।
एतद्धि रोचते मह्यं वन्येऽपि विविधे सति ॥

அத்பிரேவ து ஸௌமித்ரே வத்ஸ்யாம்யத்ய நிஶாமிமாம் ।
ஏதத்தி ரோசதே மஹ்யம் வன்யே(அ)பி விவிதே ஸதி ॥ 10

ஸௌமித்ரே - 'சுமித்ராதேவியின் திருக்குமார!
அத்ய - இன்று
இமாம் - இந்த
நிஶாம் து - இரவை மட்டும்
விவிதே - விவிதமான
வன்யே - காய்கிழங்குகள்
ஸதி அபி - இருந்தபோதிலும்கூட
அத்பி: ஏவ - தீர்த்தத்தை மாத்திரம் குடித்து
வத்ஸ்யாமி - கழிக்கப் போகிறேன்.
ஏதத் ஹி - இதுதான்
மஹ்யம் - எனக்கு
ரோசதே - நலமெனத் தோன்றுகிறது.'

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

एवमुक्त्वा तु सौमित्रिं सुमन्त्रमपि राघवः ।
अप्रमत्तस्त्वमश्वेषु भव सौम्येत्युवाच ह ॥

ஏவமுக்த்வா து ஸௌமித்ரிம் ஸுமந்த்ரமபி ராகவ: ।
அப்ரமத்தஸ்த்வமஶ்வேஷு பவ ஸௌம்யேத்யுவாச ஹ ॥ 11

ராகவ: - ஸ்ரீராமர்,
ஏவம் - மேற்கண்டவண்ணமாய்
ஸௌமித்ரிம் - ஸௌமித்திரியிடம்
உக்த்வாது - அருளிச்செய்து,
ஸுமந்த்ரம் அபி - ஸுமந்திரரை நோக்கி
இதி - பின்வருமாறு
உவாச - கட்டளையிட்டார்.
ஸௌம்ய த்வம் - 'அன்பரே! நீர்
அஶ்வேஷு - குதிரைகளிடத்தில்
அப்ரமத்த: - ஜாக்கிரதையுடையவராக
பவ - இரும்.'

सोऽश्वान् सुमन्त्रः संयम्य सूर्येऽस्तं समुपागते ।
प्रभूतयवसान् कृत्वा बभूव प्रत्यनन्तरः ॥

ஸோ஽ஶ்வான் ஸுமந்த்ர: ஸம்யம்ய ஸூர்யே(அ)ஸ்தம் ஸமுபாகதே ।
ப்ரபூதயவஸான் க்ருத்வா பபூவ ப்ரத்யநந்தர: ॥ 12

ஸூர்யே - சூரியன்
அஸ்தம் - அஸ்தமனம்
ஸமுபாகதே - ஆனபின்னர்
ஸ: ஸுமந்த்ர: - அந்தச்சுமந்திரர்,
அஶ்வான் - குதிரைகளை
ஸம்யம்ய - கட்டி,
ப்ரபூதயவஸான் - வேண்டியளவு புல்லுடனிருக்கின்றவைகளாய்
க்ருத்வா - செய்துவிட்டு,
ப்ரத்ய நந்தர: - மேல் ஆகவேண்டிய காரியங்களைக் கவனிக்கின்றவராக
பபூவ - ஆயினர்.

उपास्य तु शिवां सन्ध्यां दृष्ट्वा रात्रिमुपस्थिताम् ।
रामस्य शयनं चक्रे सूतः सौमित्रिणा सह ॥

உபாஸ்ய து ஶிவாம் ஸந்த்யாம் த்ருஷ்ட்வா ராத்ரி முபஸ்திதாம் । 13
ராமஸ்ய ஶயனம் சக்ரே ஸூத: ஸௌமித்ரிணா ஸஹ ॥

ஸூத: - ஸாரதி, (சுமந்திரர்)
ஶிவாம் - மங்களமான

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸந்த்யாம் - சந்தியை
உபாஸ்ய - உபாசித்து,
உபாகதாம் - நடைபெற்றுக் கொண்டிருந்த
ராத்ரிம் - இரவின் இருளை
த்ருஷ்ட்வா து - உத்தேசித்து உடனே
ராமஸ்ய - ஸ்ரீராமருக்கு
ஶயனம் - திருப்பள்ளியை
ஸௌமித்ரிணா ஸஹ - ஸௌமித்திரியோடுகூட
சக்ரே - இயற்றினார்.

तां शय्यां तमसातीरे वीक्ष्य वृक्षदलैः कृताम् ।
रामः सौमित्रिणा सार्धं सभार्यः संविवेश ह ॥

தாம் ஶய்யாம் தமஸாதீரே வீக்ஷ்ய வ்ருக்ஷதலை: க்ருதாம் ।
ராம: ஸௌமித்ரிணா ஸார்தம் ஸபார்ய: ஸம் விவேஶ ஹ ॥ 14

ராம: ஹ - ஸ்ரீராமரும்
தமஸாதீரே - தமஸை நதிக்கரையில்
தாம் - அந்த
ஶய்யாம் - படுக்கையை
ஸௌமித்ரிணா - ஸௌமித்திரியோடு
ஸார்தம் - கூட
வ்ருக்ஷதலை: - மரத்தினிலைகளைக் கொண்டு
க்ருதாம் - அமைக்கப் பெற்றிருப்பதை
வீக்ஷ்ய - கவனித்து,
ஸபார்ய: - தருமபத்னீ சமேதராய்
ஸம்விவேஶ - துயின்றருளினார்.

सभार्यं संप्रसुप्तं तं भ्रातरं वीक्ष्य लक्ष्मणः ।
कथयामास सूताय रामस्य विविधान् गुणान् ॥

ஸபார்யம் ஸம்ப்ரஸுப்தம் தம் ப்ராதரம் வீக்ஷ்ய லக்ஷ்மண: ।
கதயாமாஸ ஸூதாய ராமஸ்ய விவிதான் குணான் ॥ 15

லக்ஷ்மண: - லக்ஷ்மணன்
தம் - அந்த
ப்ராதரம் - தமையனாரை
ஸபார்ய: - தருமபத்னீசமேதராய்
ஸம்ப்ரஸுப்தம் - நன்கு இனிது உறங்கிக் கொண்டிருக்கின்றவராய்
ப்ரேக்ஷ்ய - கவனித்து,
ராமஸ்ய - ஸ்ரீராமரது
விவிதான் குணான் - பற்பல திருக்கல்யாண குணங்களை
ஸூதாய - ஸாரதிக்கு, (ஸுமந்திரருக்கு)
கதயாமாஸ - எடுத்துரைத்து காலங்கழித்தனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

जाग्रतोरेव सा रात्रिस्तयोः सौमित्रिसूतयोः ।
जगाम तमसातीरे रामस्य ब्रुवतोर्गुणान् ॥

ஜாக்ரதோ ரேவ ஸா ராத்ரிஸ்தயோ: ஸௌமித்ரி ஸீதயோ ।
ஜகாம தமஸாதீரே ராமஸ்ய ப்ருவதோ குணான் ॥ 16

தமஸாதீரே - தமஸை நதிக்கரையில்
ராமஸ்ய - ஸ்ரீராமருடைய
குணான் ஏவ - திருக்கல்யாண குணங்களைப் பற்றியே
ப்ருவதோ: - பேசிக்கொண்டிருந்தவர்களாய்
ஜாக்ரதோ: - துயிலாது கண்விழித்துக் கொண்டிருந்த
தயோ: - அந்த
ஸௌமித்ரி ஸூதயோ: - ஸௌமித்திரிக்கும் ஸாரதிக்கும்
ஸா - அந்த
ராத்ரி: ஜகாம - இரவு கழிந்தது.

गोकुलाकुलतीरायास्तमसाया विदूरतः ।
अवसत्तत्र तां रात्रिं रामः प्रकृतिभिः सह ॥

கோகுலா குலதீராயாஸ் தமஸாயா விதூரத: ।
அவஸத் தத்ர தாம் ராத்ரிம் ராம: ப்ரக்ருதிபி: ஸஹ ॥ 17

ராம: - ஸ்ரீராமர்
தத்ர - இப்படியாய்
கோகுலா குலதீராயா: - பல பசுத்தொழுக்கள் கட்டப்பட்டு விளங்கிய கரைகளையுடைய
தமஸாயா: - தமஸை நதியினது
அவிதூரத: - சமீபத்தில்
தாம் ராத்ரிம் - அந்த இரவை
ப்ரக்ருதிபி: - பட்டணத்து ஜனங்களுடன்
ஸஹ - கூடயிருந்தவராய்
அவஸத் - கழித்தார்.

उत्थाय तु महातेजाः प्रकृतीस्ता निशाम्य च ।
अब्रवीद्भ्रातरं रामो लक्ष्मणं पुण्यलक्षणम् ॥

உத்தாய து மஹாதேஜா: ப்ரக்ருதீஸ்தா நிஶாம்ய ச ।
அப்ரவீத் ப்ராதரம் ராமோ லக்ஷ்மணம் புண்யலக்ஷணம் ॥ 18

மஹாதேஜா: - மஹா தேஜோவானாகும்
ராம: - ஸ்ரீராமர்
உத்தாய - துயிலெழுந்து,
தா: - அந்த
ப்ரக்ருதீ: ச - பட்டணத்து ஜனங்களைப் பற்றி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நிஶாம்ய - தீர்க்காலோசனை செய்து,
புண்ய லக்ஷணம் - புண்ணமொன்றையே ஸர்வவுமாய்க் கொண்ட ஒழுக்கமுடைய
ப்ராதரம் - தம்பியாகிய
லக்ஷ்மணம் - லக்ஷ்மணரைப் பார்த்து
து - இவ்விஷயத்திலிப்படி
அப்ரவீத் - அருளிச்செய்தார்.

अस्मद्व्यपेक्षान् सौमित्रे निरपेक्षान् गृहेष्विमान् ।
वृक्षमूलेषु संसुप्तान् पश्य लक्ष्मण सांप्रतम् ॥

அஸ்மத்வ்யபேக்ஷான் ஸௌமித்ரே நிரபேக்ஷான் க்ருஹேஷ்விமான் ।
வ்ருக்ஷ மூலேஷு ஸம்ஸுப்தான் பஶ்ய லக்ஷ்மண ஸாம்ப்ரதம் ॥ 19

ஸௌமித்ரே - 'ஸுமித்திரா நந்தனாகிய
லக்ஷ்மண - லக்ஷ்மணா!
அஸ்மத்வ்யபேக்ஷான் - நம்மிடத்தில் பேரன்பு கொண்டவர்களாய்
ஸாம்ப்ரதம் - இப்பொழுது
க்ருஹேஷு - இல்லற வாழ்வின் மண்ணாசைகளிலும் பெண்ணாசைகளிலும் பொருளாசைகளிலும்
நிரபேக்ஷான் - பற்றை முற்றிலும் ஒழித்தவர்களாய்
வ்ருக்ஷ மூலேஷு - மரங்களினடிகளில்
ஸம்ஸுப்தான் - மெய்மறந்து துயிலுகின்ற
இமான் - இவர்களை
பஶ்ய - பார்.

यथैते नियमं पौराः कुर्वन्त्यस्मन्निवर्तने ।
अपि प्राणानसिष्यन्ति न तु त्यक्ष्यन्ति निश्चयम् ॥

